கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2009/2010

(January 2013) (வெளிவாரி)

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY

# ECO 202 Macro Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. (அ) பேரினப் பொருளியலையும் சிற்றினப் பொருளியலையும் வேறுபடுத்துக.
(08 புள்ளிகள்)

(ஆ) பழம் பொருளியலாளரின் பொருளியல் சிந்தனையிலிருந்து கெயின்சிய அணுகுமுறையானது எவ்வாறு மாறுபடுகின்றது? விளக்குக.
(12 புள்ளிகள்)

02. (அ) "பேரினப் பொருளியல் இலக்குகளை ஒரே நேரத்தில் அடையப் பெறுவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) தேசிய வருமானக் கணிப்பீட்டின்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

03. (அ) குறுங்கால நுகர்வுத் தொழிற்பாட்டை விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) சராசரி நுகர்வு நாட்டம் மற்றும் எல்லை நுகர்வு நாட்டம் என்பனவற்றை வேறுபடுத்துக.
(06 புள்ளிகள்)

(இ) சேமிப்புத் தொழிற்பாடு என்பதால் கருதப்படுவது யாது?
(06 புள்ளிகள்)

04.(அ) முதலீடு பற்றிய பழம்பொருளியலாளர்களுடைய கருத்தினை விமர்சன ரீதியாக ஆராய்க.
(10 புள்ளிகள்)

(ஆ) முழு வருமானக் கருதுகோளிலிருந்து சார்பு வருமானக் கருதுகோளானது எவ்வாறு வேறுபடுகின்றது? விளக்குக.
(10 புள்ளிகள்)

05.(அ) பணவீக்கத்தின் பொருளாதார விளைவுகளை எடுத்துக் கூறுக.

(08 புள்ளிகள்)

(ஆ) கேள்வித் தூண்டல் மற்றும் செலவுத் தூண்டல் பணவீக்கங்களை வேறுபடுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

06.(அ) பிலிப்ஸ் வளையியை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) நிலையான நாணயமாற்று வீத முறையின் அனுகூலம் பிரதிகூலம் என்பனவற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

07. வேலையின்மையின் முக்கிய வகைப்பாடுகளை அடையாளப்படுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

08. பேரினப் பொருளியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதில் நாணயக் கொள்கையின் பிரயோகங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

***